ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1901/22 - 2015 පෙබරවාරි මස 13 වැනි සිකුරාදා - 2015.02.13

*1901/22 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**வட மேல் மாகாண மாகாண சபை**

வடமேல் மாகாண மாகாண சபையின் 2015 ஆம் ஆண்டின்......... ஆம் இலக்க, வடமேல் மாகாண சமூக சேவைகள் நியதிச் சட்டம்

இங்கு கீழ் பிரசுரிக்கப்படும் வடமேல் மாகாண மாகாண சபையின் 2015 ஆம் ஆண்டின்............. ஆம் இலக்க, வடமேல் மாகாண சமூக சேவைகள் நியதிச் சட்டத்தை இந்த வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து முப்பது நாட்கள் முடிவடைந்ததன் பின்னர், வடமேல் மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்படும் என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

எவரேனும் ஒருவருக்கு இந்த நியதிச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகள் பற்றி சமர்ப்பிப்பதற்கு ஏதேனும் விடயங்கள் இருப்பின் அவற்றை குறித்த முப்பது நாட்களுக்குள் சமர்ப்பித்தல் வேண்டும்.

சந்தியா எஸ். குமார ராஜபக்ஷ,
வடமேல் மாகாண சமூக நலன்புரி, நன்னடத்தை,
சிறுவர் பாதுகாப்பு, மகளிர் விவகாரம், கிராமிய கைத்தொழில்
அபிவிருத்தி, கிராமிய அபிவிருத்தி அமைச்சர்.

வடமேல் மாகாண சமூக நலன்புரி, நன்னடத்தை,
சிறுவர் பாதுகாப்பு, மகளிர் விவகாரம், கிராமிய
கைத்தொழில் அபிவிருத்தி, கிராமிய அபிவிருத்தி அமைச்சு,
2 ஆவது மாடி,
வடமேல் மாகாண அலுவலக கட்டடத் தொகுதி,
குருநாகல்,
2015, பெப்புருவரி 11.



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

2 - PG 2369

**வடமேல் மாகாண மாகாண சபையின் 2015 ஆம் ஆண்டின்......... ஆம் இலக்க, வடமேல் மாகாண சமூக சேவைகள் நியதிச் சட்டம் (வரைவு)**

நீண்ட பெயர்.

வடமேல் மாகாணத்தில் வசிக்கும் அநாதைகளுக்கு மற்றும் அநாதைக் குடும்பங்களுக்கு புனர்வாழ்வளித்தல், உடல் மற்றும் உள ரீதியில் அத்துடன் சமூக நலக் குறைபாடுகளுடன் கூடிய ஆட்களுக்கு புனர்வாழ்வளித்தல் அத்துடன் அவர்களுடைய நலனோம்பல்கள், வலிமையற்ற அத்துடன் தொழில் பார்க்க முடியாத ஆட்களுக்கு சலுகையளித்தல் போன்ற நலனோம்பல் சேவைகளை வினைத்திறனுடன் நடாத்திச் செல்வதற்கும் இவற்றுடன் தொடர்புள்ள இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுகளைச் செய்வதற்குமானதொரு நியதிச் சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வடமேல் மாகாண சபையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக.

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.

1. இந்த நியதிச் சட்டம் ........ ஆம் ஆண்டின் .......... ஆம் இலக்க, வடமேல் மாகாண மாகாண சபையின் சமூக சேவைகள் நியதிச் சட்டம் என அழைக்கப்படலாமென்பதோடு, வடமேல் மாகாண ஆளுநரின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்ற திகதி முதல் நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

நியதிச் சட்டத்தின் குறிக்கோள்.

2. இந்த நியதிச் சட்டத்தின் நோக்கங்கள் பின்வருமாறாகும் :-

(1) வடமேல் மாகாணத்தில் வசிக்கும் நலனோம்பல் சேவைகள் வழங்கப்படவேண்டிய வறியவர்களுக்கும் அநாதரவானவர்களுக்கும் உதவிச் சலுகைச் சேவைகளை வழங்குதலும் அவர்களுக்கு புனர்வாழ்வளித்தலும் மேம்படுத்தலும் ;

(2) உடல் மற்றும் உள ரீதியிலும் சமூகநல ரீதியிலும் குறைபாடுகளுடன் கூடிய ஆட்களுக்கும் அநாதரவான முதியோர்களுக்கும் பாதுகாப்பளித்தல், புனர்வாழ்வளித்தல், மேம்படுத்துதல் ;

(3) உடல் மற்றும் உள ரீதியில் குறைபாடுகளுடன் கூடிய ஆட்களுக்காகவும் முதியோர்களுக்காகவும் தன்னார்வ அடிப்படையில் அல்லது வர்த்தக நோக்கில் அல்லது பிற நோக்கொன்றில் நடாத்திச் செல்லப்படும் இல்லங்களை, நிறுவனங்களை பதிவு செய்தல், மேற்பார்வை செய்தல், ஒழுங்குறுத்துதல் உட்பட தன்னார்வ அடிப்படையிலான இல்லங்களுக்கும் நிறுவனங்களுக்கும் உதவி வழங்குதல் ;

(4) வறிய மற்றும் அநாதரவான மக்களுக்கு நிவாரணம் வழங்குதல், வாழ்க்கைத் தொழிலொன்றில் ஈடுபட முடியாத சயரோகம், புற்றுநோய், குஷ்டநோய், தலசீமியா போன்ற நோய்வாய்ப்பட்டவர்களுக்கும் பிற இனங்காணப்பட்ட விசேட நோய்களுக்கு ஆளானவர்களுக்கும் சலுகையளித்தல்.

பாகம் I

**மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தை தாபித்தலும் அதன் கட்டமைப்பும் தத்துவங்களும் பணிகளும்**

சமூக சேவைகள் திணைக்கள மொன்றைத் தாபித்தல்.

3. இந்த நியதிச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக “வடமேல் மாகாண சமூக சேவைகள் திணைக்களம்” என அழைக்கப்படும் (இதனகத்துப் பின்னர் திணைக்களம்) திணைக்களமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

பணிப்பாளர் நியமிக்கப்படலா மென.

4. (1) இதனகத்துப்பின்னர் பணிப்பாளராக இலங்கை நிர்வாக சேவையின் I ஆம் வகுப்பைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவராக குறிப்பிடப்படும் வடமேல் மாகாண சமூக சேவைகள் பணிப்பாளர் இங்கு 3 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட திணைக்களத்தின் தலைவராவார்.

(2) மாகாணப் பணிப்பாளருக்கு ஒத்தாசை வழங்கும் பொருட்டு திணைக்கள ரீதியிலான உதவிப் பணிப்பாளர்கள் இருவரையும் திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் நிறுவனங்களின் தலைவர்களாக நிறுவன அத்தியட்சகர்களையும் பதினைந்து பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு ஒருவர் வீதம் தலைமையக சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் மூவரையும் போதுமான எண்ணிக்கையில் சமூக சேவைகள் உத்தியோகத்தர்களையும் ஏனைய உத்தியோகத்தர்களையும் ஊழியர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) திணைக்கள பணியாட்டொகுதியின் நியமனம், இடமாற்றம், பதவி நீக்கம், அவர்களுடைய ஒழுக்காற்று கட்டுப்பாடு அத்துடன் இடைநேர்விளைவான விடயங்கள் சம்பந்தமாக 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்திலுள்ள ஏற்பாடுகள் ஏற்புடையதாதல் வேண்டும்.

(4) இந்த நியதிச் சட்டத்தின் நோக்கங்களுக்காக நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் அனைவரும் தண்டனைச் சட்டகோவையில் பொருள் கோரப்பட்டுள்ளவாறு அரசாங்கப் பணியாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

திணைக்களத்தின் பணிகளும் கடமைகளும்.

5. இந்த திணைக்களத்தின் பணிகளும் கடமைகளும் பின்வருமாறாகும் :-

(1) வறிய குடும்பங்களைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு மாதாந்த பொது உதவிப்படியை வழங்குதல்;

(2) வறிய குடும்பங்களிலுள்ள சயரோகம், புற்றுநோய், குஷ்டநோய், தலசீமியா போன்ற நோய்களுக்கு ஆளானவர்களுக்கு தகைமையுடைய மருத்துவர்களைக் கொண்ட குழுவொன்றின் சிபாரிசின் மீது உதவி வழங்குதல்;

(3) தற்காலிகமாக அனர்த்தங்களுக்குள்ளாகி அநாதைகளானவர்களுக்கும் அநாதைக் குடும்பங்களுக்கும் சலுகையளித்தலும் அவர்களுக்கு புனர்வாழ்வளித்தலும் ;

(4) சிரேஷ்ட பிரசைகளுக்காக தரம்வாய்ந்த முதியோர் இல்லங்களையும் நிறுவனங்களையும் தாபித்து நடாத்தி செல்லுதலும் அவர்களுக்கு புனர்வாழ்வளித்தலும் ;

(5) வலது குறைந்த அத்துடன் மூளை வளர்ச்சி குறைந்த ஆட்களுக்காக தரம்மிக்க இல்லங்களையும் நிறுவனங்களையும் தாபித்து நடாத்திச் செல்லுதலும் முற்பள்ளிகள் மற்றும் தேர்ச்சி அபிவிருத்தி நிலையங்களை நடாத்திச் செல்லுதலும் அவர்களுக்கு புனர்வாழ்வளித்தலும் மேம்படுத்தலும் ;

(6) சலுகைகளை எதிர்பார்க்கும் வறிய குடும்பங்களில் வலது குறைந்தோருக்கு மூக்குக்கண்ணாடி, செவிப் புலன் கருவி, சக்கரநாற்காலி, முச்சக்கரவண்டி, ஊன்றுகோல், நடப்பதற்காக பயன்படுத்தும் உபகரணம், கண்வில்லை, செயற்கை கால் மற்றும் கை போன்ற இடையூறுகளை தவிர்த்துக்கொள்வதற்கு தேவைப்படும் உபகரணங்களை வழங்குதல் ;

(7) அநாதரவான அத்துடன் பாதுகாப்பு தேவைப்படும் முதியோர்களையும் வலது குறைந்தோரையும் பேணுவதற்காக தன்னார்வ அமைப்புகளாக பதிவு செய்து கொண்டுள்ள நிறுவனங்களுக்கு பராமரிப்பு உதவி மற்றும் ஏற்புடைய உதவிகளை வழங்குதல் இத்தகைய சேவைகளை வழங்கும் நிறுவனங்களுக்கு கூட்டு உதவிகளை வழங்குதலும் இந்த நிறுவனங்களை மேற்பார்வை செய்தலும் ;

(8) சமூகநலக் குறைபாடுகளுடன் கூடிய அத்துடன் அத்தகைய நிலைமைக்கு ஆளாகக்கூடிய குடும்பங்கள் மற்றும் ஆட்களுக்கு புனர்வாழ்வளிப்பு சேவைகளை வழங்குதல் ;

(9) சமூகத்தில் பல்வேறுபட்ட காரணங்களினால் உள ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள அல்லது பாதிக்கப்படவுள்ள ஆட்கள் மற்றும் குடும்பங்கள் சார்பில் ஆலோசனைச் சேவைகளை வழங்குதல், அவர்களுக்கு புனர்வாழ்வளித்தல் இவற்றுக்காக ஆலோசனை நிலையங்களை தாபித்து நடாத்திச் செல்லுதல் ;

(10) மேல் 2 ஆம் பிரிவின் நோக்கங்களுக்குரியதாக விசேட கல்வி, ஆய்வு மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல் ;

(11) தற்காலிகமாக அனர்த்தங்களுக்குள்ளாகி அநாதைகளானவர்களுக்கும் குடும்பங்களுக்கும் சலுகையளித்தலும் அவர்களுக்கு புனர்வாழ்வளித்தலும் நீண்டகால அனர்த்தங்களுக்குள்ளாகி அநாதைகளானவர்களுக்கும் குடும்பங்களுக்கும் ஏனைய அரசாங்க நிறுவனங்களினால் வழங்கப்படும் சேவைகள் மற்றும் உதவிகள் மூலம் தழுவப்படாத சலுகைகளை வழங்குதலும் புனர்வாழ்வளித்தலும் ;

(12) முதியோர்களையும் வலதுகுறைந்தோர்களையும் தங்க வைத்துப் பராமரிக்கும் அல்லது அவர்களுக்கான சேவைகளை வழங்கும் வடமேல் மாகாணத்திலுள்ள சகல நிறுவனங்களையும் பதிவு செய்தல், இந்த நிறுவனங்களின் சேவை வழங்குகை தொடர்பில் தரங்களை தயாரித்தல், குறித்த தரங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றவா என்பதை பரிசீலித்துப் பார்த்தல், பதிவு செய்யப்படாத அல்லது தரங்களை நடைமுறைப்படுத்தாத நிறுவனங்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் எடுத்தல், பதிவு செய்யப்பட்ட தன்னார்வ அடிப்படையில் செயற்படும் இல்லங்களுக்கு பராமரிப்பு உதவிகளை வழங்குதல், ஏற்புடைய ஏனைய உதவிகளை வழங்குதல், அத்தகைய சேவைகள் வழங்கும் நிறுவனங்களுக்கு கூட்டு உதவிகளை வழங்குதல் நிறுவனங்களை மேற்பார்வை செய்தல், ஒழுங்குறுத்துதல் ;

(13) சமூகசேவைகள் பணிப்பாளரின் அங்கீகாரத்தின் மீது அல்லது நீதிமன்ற கட்டளையின் மீது பதிவு செய்யப்பட்ட தன்னார்வ அடிப்படையில் செயற்படும் இல்லங்களுக்கு சேர்க்கப்படும் முதியோர்/ வலது குறைந்தோர் சார்பில் பராமரிப்பு உதவிகளை வழங்குதல் ;

(14) விதவைகள், நீண்டகால நோய் காரணமாக ஆதரவற்ற குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கு கல்வி உதவிகளை வழங்குதல் ;

(15) வீடற்ற குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வீடுகளை உதவியாக வழங்குதல் ;

(16) நீண்டகாலம் சிகிச்சை பெறவேண்டுமென மருத்துவச் சபையொன்றினால் சிபாரிசு செய்யப்படும் நோயாளிகளுக்கு விசேட மருத்துவ உதவிகளை வழங்குதல் ;

(17) சிறைச்சாலைகளிலுள்ளவர்களின் குடும்பங்களுக்கு புனர்வாழ்வளிக்கும் நிகழ்ச்சித்திட்டம்.

திணைக்களத்தின் தத்துவங்கள்.

6. (1) இந்த நியதிச்சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களையும் பணிகளையும் நிறைவேற்றுவதற்குத் தேவையான தகவல்களை அல்லது அறிக்கைகளை சமூக சேவைகள் பணிப்பாளரினால் அல்லது அவரினால் அதிகாரம் கையளிக்கப்பட்ட வேறு உத்தியோகத்தர் ஒருவரினால் ஏதேனும் நிறுவனமொன்றிடமிருந்து அல்லது ஆள் ஒருவரிடமிருந்து கோருமிடத்து குறித்த ஆள் அல்லது நிறுவனம் பணிப்பாளருக்கு அத்தகைய தகவல்களை, அறிக்கைகளை வழங்குதல் வேண்டும்.

(2) வடமேல் மாகாணத்தினுள் நடாத்திச் செல்லப்படும் இல்லங்கள் மற்றும் சேவை வழங்கும் நிறுவனங்கள் யாவும் ஏதேனும் நிறுவனமொன்றின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தாலும் அதேபோன்று பதிவு செய்யப்படாதிருந்தாலும் இந்த சகல நிறுவனங்களுக்கும் சமூக சேவைகள் பணிப்பாளருக்கு அல்லது சமூக சேவைகள் பணிப்பாளரினால் அதிகாரம் கையளிக்கப்படும் எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு முன்னறிவித்தல் இன்றி எந்த நேரத்திலும் இந்த நியதிச் சட்டத்தின் நோக்கங்களுக்காக –

(i) நுழைவதற்கும் ;

(ii) ஏதேனும் பரிசோனை ஒன்றைச் செய்வதற்கும் ;

(iii) விசாரிப்பதற்கும் ;

(iv) புலனாய்வு செய்வதற்கும் ;

(v) அளவையொன்றைச் செய்வதற்கும் ;

(vi) குறித்த நோக்கங்களுக்கு சாதாரணமாக தேவைப்படும் ஆவணங்களை பரிசோதிப்பதற்கும் தகவல்களை பெறுவதற்கும் ; அத்துடன்

(vii) தேவையான ஆவணங்கள் பெறுவதற்கும் ஏதேனும் நடவடிக்கையொன்றை எடுப்பதற்கும்

அதிகாரம் உள்ளது.

7. பிரிவு 5 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களையும் பணிகளையும் நிறைவேற்றுவது சம்பந்தமாக வடமேல் மாகாணத்தில் தன்னார்வ அடிப்படையில் நடாத்திச் செல்லப்படும் இல்லங்கள் மற்றும் சேவை வழங்கும் நிறுவனங்கள் யாவும் வடமேல் மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

*நியதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்கள் மற்றும் பணிகள் சம்பந்தமாக நடாத்திச் செல்லப்படும் இல்லங்கள்/நிறுவனங்கள் பதிவு செய்யப்பட வேண்டுமென.*

(1) வெளிநாட்டு அரச சார்பற்ற அமைப்பொன்றின் மூலம் நடாத்திச் செல்லப்படும் இல்லமொன்றாயின் அல்லது நிறுவனமொன்றாயின் அரசாங்கத்தின் சமூக சேவைகள் அமைச்சில் அரச சார்பற்ற அமைப்புக்களை பதிவு செய்யும் செயலகத்தில் பதிவு செய்து கொண்டதன் பின்னர் வடமேல் மாகாண சமூக சேவைகள் திணைக்களத்திலும் பதிவு செய்து கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) மேல் 5 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களையும் பணிகளையும் நிறைவேற்றுவது சம்பந்தமாக வடமேல் மாகாணத்தில் எந்த அடிப்படையிலேனும் புதிதாக ஆரம்பிக்கப்படும் இல்லங்கள் மற்றும் சேவை வழங்கும் நிறுவனங்கள் யாவும் அவ்வாறு ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் வடமேல் மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தில் தற்காலிகமாக பதிவு செய்து கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) அவ்வாறு ஆரம்பிக்கப்படும் இல்லங்கள்/நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்டு ஒருவருட காலம் பூர்த்தியடைந்தவுடன் உடனடியாக நிரந்தரமாக பதிவு செய்து கொள்ளப்படுதல் வேண்டும் (தேவைகளை அடிப்படையாகக் கொண்டு 6 மாதங்களின் பின்னர் தற்காலிக பதிவினை வழங்குதல்).

*பாகம் II*

**வடமேல் மாகாண சமூக சேவைகள் நிதியம்**

8. இந்த நியதிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை எய்தும் பொருட்டு "வடமேல் மாகாண சமூக சேவைகள் நிதியம்" எனும் பெயரில் நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்படுதல் வேண்டும்.

*வடமேல் மாகாண சமூக சேவைகள் நிதியம்.*

9. (1) இந்த நிதியத்தின் பெயரில் புறம்பான வங்கிக் கணக்கொன்று அரச வங்கியொன்றில் சமூக சேவைகள் பணிப்பாளரினால் நடாத்திச் செல்லப்படுதல் வேண்டும்.

*நிதியத்தின் கட்டமைப்பு.*

(2) இந்த நிதியத்தின் கணக்குக்கு பின்வரும் நிதிகளை வைப்புச் செய்தல் வேண்டும்.

(i) அரசாங்கத்தினால் நிதியுதவியாக காலத்துக்குக் காலம் வழங்கப்படும் நிதி ;

(ii) வடமேல் மாகாண சபையினால் நிதியத்தின் கணக்கு நோக்கங்களுக்காக அங்கீகரிக்கப்படும் நிதி ;

(iii) மாகாண சபைச் சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் அரசாங்கத்தினால் வழங்கப்படும் வெளிநாட்டு உதவியாக கிடைக்கும் அத்தகைய நிதி ;

(iv) கண்காட்சிகள், லொத்தர்கள் உட்பட பிற அங்கீகரிக்கப்பட்ட வழிமுறைகளில் கிடைக்கும் அத்தகைய சகல நிதிகளும் ;

(v) உள்நாட்டு அல்லது வெளிநாட்டு ஆளொருவரின் அல்லது நிறுவனமொன்றின் அல்லது அமைப்பொன்றின் ஊடாக செய்யப்படும் நன்கொடைகளாகக் கிடைக்கப்பெறும் அத்தகைய சகல நிதிகளும்.

(3) இந்த நியதிச் சட்டத்தின் நோக்கங்களை எய்தும் பொருட்டு உறப்படும் செலவுகள் இந்த நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

*நிதியத்தினால் செலவுகள் உறப்படுதல்.*

(4) எவ்வாறாயினும் ஏதேனும் திட்டவட்டமான நோக்கங்களுக்காக பயன்படுத்த வேண்டுமென்னும் நிபந்தனையின் மீது மேல் (2) ஆம் உபபிரிவின் (iii) ஆம் , (iv) ஆம் (v) ஆம் பந்திகளின் கீழ் நிதி கிடைக்கும் சந்தர்ப்பத்தில் இந்த நிதித்தொகையை நிதியத்தின் கணக்கில் வரவு வைப்பதற்காக பொறுப்பேற்பது அமைச்சரின் தற்றுணிபின் பேரிலாதல் வேண்டும்.

நிதியத்தின் கணக்குகளின் கட்டுப்பாடு.

10. அமைச்சரின் அங்கீகாரத்தின் மீது நியமிக்கப்படும் சபையொன்றின் கீழ், அமைச்சரின் அங்கீகாரத்துடன் நிதியத்தின் கணக்கினை நடாத்திச் செல்லும் பொறுப்பு அமைச்சின் செயலாளருக்கு உரியதாகும். அமைச்சர் ஒருவர் இல்லாதவிடத்து செயலாளருக்கு உரிய அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரம் கையளிக்கப்படும்.

நிதியத்தின் நிதியாண்டு.

11. நிதியத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

நிதியத்தின் கணக்குகளை கணக்காய்வு செய்தல்.

12. அரசாங்க நிறுவனங்களின் கணக்குகளை கணக்காய்வு செய்வது சம்பந்தமாக அரசியலமைப்பின் 15 4 ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளும் வடமேல் மாகாண சபையின் நிதி ஒழுங்குவிதிகளும் இந்த நிதியத்தின் கணக்குகளை கணக்காய்வு செய்வது தொடர்பில் ஏற்புடையதாதல் வேண்டும்.

நிதியத்தின் கணக்குகள் தொடர்பான அறிக்கைகள்.

13. அமைச்சரினால் பஞ்சாங்க ஆண்டு முடிவடைந்து 6 மாத காலத்திற்குள் குறித்த பஞ்சாங்க ஆண்டிற்கான நிதியத்தின் கணக்குகளின் நிர்வாகம் தொடர்புற்ற அறிக்கையும் கணக்காய்வு செய்யப்பட்ட குறித்த ஆண்டிற்கான கணக்குகளின் பிரதியும் இந்த கணக்குகள் தொடர்பில் கணக்காய்வாளர் அதிபதியின் பிரதியும் மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

## பாகம் III

### நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை

நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையை நியமித்தல்.

14. இந்த நியதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக தாபிக்கப்படும் நிதியத்தின் கணக்குகளை நிர்வகிப்பதற்காக பின்வரும் உறுப்பினர்களைக் கொண்ட நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையொன்று சமூக சேவைகள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(1) மாகாண சபையின் சமூக சேவைகள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் - (தலைவர்);

(2) மாகாண சமூக சேவைகள் பணிப்பாளர் - (செயலாளர்) ;

(3) மாகாண சபையின் நிதி முகாமைத்துவம் பற்றிய பிரதி பிரதம செயலாளர் ;

(4) விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமனஞ் செய்யப்படும் அங்கீகரிக்கப்பட்ட தன்னார்வ அமைப்புக்களிலிருந்து இரண்டு பிரதிநிதிகள் .

சபையின் உறுப்பினர்களின் நியமனம்.

15. நம்பிக்கைப் பொறுப்பாளர் சபைக்கு நியமனஞ் செய்யப்படும் உறுப்பினர்களின் பதவிக்காலம் நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று (3) வருடங்களாகுமென்பதோடு, இந்த காலம் முடிவுற்றதன் காரணமாக உறுப்பினர் பதவியிலிருந்து விலகும் ஒருவர் மீண்டும் நியமனம் பெறுவதற்கு தகைமையுடையவராவார்.

16. உத்தியோகபூர்வ நிலைமையின் மீது நியமனஞ் செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர் அவருடைய பதவி வகிக்கும் காலம் முடிவடைந்தவுடன் அவருடைய உறுப்பான்மை இல்லாதொழிவதோடு, பின்னுரிமையாளரானவர் மீதிக் காலப்பகுதிக்கு நியமிக்கப்படுதலும் வேண்டும்.

17. அமைச்சருக்கு சமர்ப்பிக்கும் எழுத்துமூலக் கோரிக்கையின் மூலம் உத்தியோகபூர்வ நிலைமையின் மீது நியமிக்கப்படும் உறுப்பினர் ஒருவர் விலகலாம்.

18. உறுப்பினர் ஒருவர் இராஜினாமா செய்ததனால் அல்லது விலக்கப்படுவதனால் உருவாகும் வெற்றிடமொன்றுக்கு மீள் நியமிக்கப்படுபவரின் பதவிக்காலமானது முன்னைய உறுப்பினர் நியமிக்கப்பட்ட பதவிக்காலம் முடிவுறாது எஞ்சியிருக்கும் காலத்துக்கு வரையறுக்கப்படுதல் வேண்டும்.

19. சபையின் எவரேனும் உறுப்பினர் ஒருவர் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவராக அல்லது மாகாண சபை உறுப்பினர் ஒருவராக அல்லது உள்ளூராட்சி அதிகாரசபையொன்றின் உறுப்பினர் ஒருவராக தேர்ந்தெடுக்கப்பட்டால் அல்லது அத்தகைய பதவியொன்றுக்கு நியமிக்கப்பட்டால் அவ்வாறு நியமிக்கப்படும் திகதி முதல் அவர் சபையின் உறுப்பினர் ஒருவராக இருப்பதற்கு தகைமையற்றவராவார்.

கூட்ட நடப்பெண்.

20. மேல் 14 ஆம் பிரிவின் கீழ் நியமனஞ் செய்யப்பட்ட சபையின் கூட்ட நடப்பெண் மூன்று பேர்களாதல் வேண்டும்.

21. மேற்போந்த நம்பிக்கை பொறுப்பாளர் சபையானது ஆகக்குறைந்தது மூன்று (03) மாதங்களுக்கு ஒரு தடவையாவது கூடுதல் வேண்டும்.

22. இந்தச் சபைக்கு நியமனஞ் செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர் ஏதேனும் நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாக்கப்பட்டிருந்தால் அல்லது ஏதேனும் ஒழுக்கக்கேடான நடவடிக்கையொன்று தெரியவந்ததன் காரணத்தினால் குற்றவாளியாக்கப்பட்டிருந்தால் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் அவரை உறுப்பினர் பதவியிலிருந்து விலக்குதல் வேண்டும்.

## பாகம் IV

## குற்றங்களும் தண்டனைகளும்

23. எவரேனும் ஆள் ஒருவர் - குற்றங்கள்.

(1) இந்த நியதிச்சட்டத்தின் கீழ் அல்லது இந்த நியதிச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அல்லது இந்த நியதிச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் நியதியொன்றின் அல்லது கட்டளையொன்றின் கீழ் ஆக்கப்படும் அல்லது வழங்கப்படும் ஏதேனும் அறிக்கையொன்றின் அல்லது பிற ஆவணமொன்றின் மீது வேண்டுமென்றே ஏதேனும் உண்மைக்குப் புறம்பான அல்லது பிழையான வெளிப்படுத்துகையை செய்தல்.

(2) இந்த நியதிச் சட்டத்தில் விதித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் தகவலொன்றை அல்லது அறிக்கையொன்றை வழங்கத்தவறுதல் அல்லது நிராகரித்தல்.

(3) சமூக சேவைகள் பணிப்பாளரின் கட்டளை அறிவித்தல் அல்லது கட்டளைகள் சாதாரண காரணங்கள் இன்றி தவறுதல்.

(4) இந்த நியதிச் சட்டத்தினால் அல்லது இதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையொன்றின் மீது அல்லது இதன் ஊடாக எவரேனும் ஆள் ஒருவருக்கு கையளிக்கப்பட்டுள்ள ஏதேனும் தத்துவங்களை அல்லது பணிகளை நடைமுறைப்படுத்தும் போது அல்லது நிறைவேற்றும் போது அவருக்கு இடையூறு விளைவித்தல் ; அத்துடன்

(5) இந்த நியதிச் சட்டத்தின் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளையொன்றை ஏற்பாடொன்றை மீறும் அல்லது அதற்கமைவாக செயலாற்றுவதனை வேண்டுமென்றே நிராகரித்தல் அத்துடன்/அல்லது வேண்டுமென்றே இடையூறு விளைவித்தல்.

இந்த நியதிச் சட்டத்தின் கீழ் தவறொன்றுக்கு குற்றவாளியாவார்.

24. இந்த நியதிச் சட்டத்தின் கீழ் குற்றங்கள் புரியப்பட்டவிடத்து வழக்குத் தொடர்வதற்கான அதிகாரம் சமூக சேவைகள் பணிப்பாளருக்கு அல்லது அவரினால் அதிகாரம் கையளிக்கப்பட்ட உத்தியோகத்தருக்கு உரியதாகும். வழக்கு தொடர்வதற்கான அதிகாரம்.

25. இந்த நியதிச் சட்டத்தின் கீழ் குற்றமொன்றை புரியும் ஒருவர் சம்பந்தமாக நீதிவான் ஒருவரின் முன்னிலையில் நடாத்தப்படும் வழக்கு விசாரணையொன்றில் குற்றவாளியாக்கப்பட்டதன் பின்னர், ஆகக்குறைந்தது பத்தாயிரம் (ரூ. 10,000) ரூபாவும் , ஒரு இலட்சம் ரூபாவையும் (ரூ. 1,00,000) விஞ்சாத தண்டப்பணமொன்றுக்கு அல்லது ஆறு (06) மாதங்களை விஞ்சாத காலமொன்றுக்கு மறியற்தண்டனை அல்லது தண்டப்பணம் மறியற்தண்டனை என்னும் இரண்டு தண்டனைகளுக்கும் ஆட்படுதல் வேண்டும். தண்டனைகள்.

இந்த நியதிச்சட்டத்தின் கீழ் குற்றமொன்றைப் புரியும் சகலருக்கும் நீதிவான் ஒருவர் முன்னிலையில் சுருக்கமுறை வழக்கு விசாரணையொன்றில் குற்றவாளியாக்கப்பட்டால் ஐயாயிரம் (ரூ. 5,000) ரூபாவைக் கொண்ட தண்டப் பணமொன்றுக்கு அல்லது ஆறு (06) மாதங்களை விஞ்சாத காலமொன்றுக்கு மறியற்தண்டனை என்னும் இரண்டு தண்டனைகளுக்கும் ஆட்படுதல் வேண்டும்.

## பாகம் V

## பொது ஏற்பாடுகள்

26. (1) இந்த நியதிச் சட்டத்தில் உள்ள விடயங்கள் சம்பந்தமாக அமைச்சரானவரினால் கட்டளைகள் ஆக்கப்படலாம். கட்டளைகளை ஆக்குதல்.

27. அமைச்சரினால் ஆக்கப்படும் கட்டளைகள் யாவும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் மூன்று (03) மாதங்களுக்குள் அங்கீகாரத்துக்காக மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். மாகாண சபையினால் அங்கீகரிக்கப்படாத ஏதேனும் கட்டளையொன்று இந்த கட்டளையின் கீழ் செய்யப்பட்ட எவற்றுக்கும் பங்கமின்றி இல்லாதொழிந்ததாக கருதப்படுதலும் வேண்டும். ஏதேனும் கட்டளையொன்று இல்லாதொழிக்கப்பட்டதாக கருதப்படும் திகதியானது வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுதல் வேண்டும்.

*28.* இந்த நியதிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட நிறுவனங்களின் பராமரிப்புக்காக தேவைப்படும் நிதி ஏற்பாடுகள் வழங்குதல் உட்பட செலவு செய்தல் சம்பந்தமாக 1982 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்திலுள்ள ஏற்பாடுகள் ஏற்புடையதாதலும் வேண்டும்.

பாகம் VI

**பொருள் கோடல்**

பொருள் கோடல்.

*29.* இந்த நியதிச் சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவிதமாக தேவைப்படுத்தினாலன்றி -

"அமைச்சர்" என்னும் போது, வடமேல் மாகாண சபையின் சமூக சேவைகள் என்னும் விடயம் கையளிக்கப்பட்டுள்ள அமைச்சர் எனவும் ;

"பணிப்பாளர்" என்னும் போது, 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபை சட்டத்தின் கீழ் வடமேல் மாகாணத்திற்காக நியமிக்கப்பட்டுள்ள சமூக சேவைகள் பணிப்பாளர் எனவும் ;

"தற்காலிக அனர்த்தங்கள்" என்னும் போது, பெரிதாக இல்லாத ஆள் ஒருவரினால் கட்டுப்படுத்த முடியாத காரணங்களினால் நிகழும் இயற்கையாக ஏற்படும் சிறிய சேதங்கள் எனவும் ;

"வலதுகுறைந்தோர்" என்னும் போது உள குறைபாடு, காக்காய்வலிப்பு நோய்நிலை அல்லது வாழ்வதற்கான தேவைகளை முழுமையாக அல்லது பகுதியாக தாமே தமக்காக நிறைவேற்றிக் கொள்ள முடியாது பிற உடல் குறைபாடுகள் கொண்டோர் எனவும்,

"வறிய" என்னும் போது, தனது வாழ்வாதாரத்துக்கு அன்றாட வாழ்க்கைக்கு அடிப்படை உதவி கிடைக்காவிட்டால் வாழ்க்கையை கொண்டு செல்ல முடியாத ஆள் ஒருவர் எனவும்,

"நிதியம்" என்னும் போது இந்த நியதிச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்படும் நிதியம் எனவும்,

"பொதுமக்கள் உதவி" என்னும் போது, வருமான வழியற்ற வறிய, வயது முதிர்ந்த, நோய்வாய்ப்பட்ட, உடல் உள ரீதியில் பாதிக்கப்பட்ட ஆட்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் படி எனவும்;

"தன்னார்வ" என்னும் போது, பிரசைகள் குழுவொன்றினால் தன்னார்வ அடிப்படையில் தாபித்துக் கொண்டு,

(1) அரசசார்பற்றதும் தமது சொந்தப் பணிகளை மேற்கொள்ளும் போது பொது நன்கொடைகள், பங்களிப்புத் தொகை, அரசாங்கத்தினால் வழங்கப்படும் உதவித் தொகை மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு நன்கொடைகள் மீது தங்கியிருப்பவர்கள் எனவும்,

(2) உடல், உள குறைபாடுகளுடன் கூடியவர்களுக்கு, வறியவர்களுக்கு, அநாதைகளுக்கு, ஆதரவற்றவர்களுக்கு தேவைப்படும் நிவாரணங்களையும் வெளி மற்றும் தங்குமிட சேவைகளையும் வழங்கியும் இயற்கை அனர்த்தங்களின் போது நிவாரணங்களை வழங்குவதையும் முதன்மை நோக்கமாகக் கொண்ட அமைப்பொன்று எனவும்,

பொருள்படும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*30.* இந்த நியதிச் சட்டத்தில் சிங்களம், தமிழ் உரைகளுக்கிடையில் ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

2- 831

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.